ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2336/57 - 2023 ජුනි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.06.15

*2336/57 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் 8(ஒ)(5) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி அனுமதிக்கான மேன்முறையீட்டுக் குழு மற்றும் செயலகத்தை ஸ்தாபிப்பதற்கான அறிவித்தல்***

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகிய பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் (1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் மூலம் (திருத்தப்பட்ட) 8(ஒ)(5) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் மேற்படி சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், "நகர அபிவிருத்திக்கு உகந்த பிரதேசங்கள்" என அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்ட அனைத்துப் பிரதேசங்களுக்குமான அபிவிருத்தி அனுமதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அதிகார சபை மறுப்பு தெரிவிப்பதன் மூலம் மன உளைச்சலுக்கு உள்ளான நபர்களின் மேன்முறையீட்டு மனுக்களை மீளாய்வு செய்வதற்கான மேன்முறையீட்டுக் குழு (இனிமேல் "அபிவிருத்தி அனுமதிக்கான மேன்முறையீட்டுக் குழு" என்று அழைக்கப்படக்கூடிய) நிறுவப்பட்டது என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

(அ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு அபிவிருத்தி அனுமதிகள் மீதான மேன்முறையீட்டுக்கான இறுதித் தீர்மானத்தை வழங்குதல் ;

(ஆ) அபிவிருத்தி அனுமதிக்கான மேன்முறையீட்டுக் குழுவின் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்ற பின்வரும் உறுப்பினர்களை நியமித்தல் :

- (அ) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் (தலைவர்) ;
- (ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ;
- (இ) தலைவர், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ;
- (ஈ) கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் முகாமைத்துவ சபை உறுப்பினர் ;
- (உ) பணிப்பாளர் நாயகம், நகர அபிவிருத்தி அதிகார சபை ;
- (ஊ) மேலதிக பணிப்பாளர் நாயகம், நகர அபிவிருத்தி அதிகார சபை.

1A – PG 6352 – 21 (2023/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) அபிவிருத்தி அனுமதிகளுக்கான மேன்முறையீட்டுக் குழுவின் தேவைக்கேற்ப பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்-வலயம் 1) அல்லது நியமன உத்தியோகத்தர், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்-வலயம் 2) அல்லது நியமன உத்தியோகத்தர், சம்பந்தப்பட்ட பணிப்பாளர் அல்லது உத்தியோகத்தர் ஆகியோரை அழைப்பித்தல் ;

(ஈ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் கீழ் மேன்முறையீட்டுக் குழுவிற்கான செயலகமொன்று ஸ்தாபிக்கப்படுவதுடன், அதன் மூலம், பிரதான திட்டமிடல் குழுவினால் நிராகரிக்கப்பட்ட, அமைச்சரிடம் முறையிடப்படும் பிரச்சினைகள் தொடர்பாக தேவையான ஆவணங்களை தயார் செய்தல், பௌதீக கட்டிட வரைபடங்களின் அடிப்படையில் அபராத தொகையினைக் கணக்கிடுதல் மற்றும் அவ்வாவணங்களை மேன்முறையீட்டுக் குழுவுக்குச் சமர்ப்பித்தல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் ;

(உ) அபிவிருத்தி அனுமதிக்கான மேன்முறையீட்டுக் குழுவின் பரிந்துரையை இறுதி ஒப்புதலுக்காக கௌரவ அமைச்சருக்கு அறிவித்தல் ;

(ஊ) கௌரவ அமைச்சரின் இறுதித் தீர்மானம் கிடைக்கப்பெற்றதன் பின்னர், அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரின் கையொப்பத்துடன் வழங்குதல் ;

(எ) மாதமொன்றுக்கு இரண்டு மேன்முறையீட்டுக் குழுக்களை நடாத்துதல் மற்றும் ஒரு குழுவில் குறைந்தபட்சம் இரண்டு கோப்புகளைப் பார்வையிடல் ;

(ஐ) நாட்டில் அங்கீகரிக்கப்படாத கட்டமைப்புகளை ஒழுங்குபடுத்துமிடத்து, அபிவிருத்தி அனுமதிக்கான மேன்முறையீட்டுக் குழுவினால் பின்வரும் வழிகாட்டல்கள் பின்பற்றப்படுதல் :

(i) அனுமதியினை வழங்கும் சந்தர்ப்பத்தில் கீழ்வருமாறு அபராதக் கட்டணம் மதிப்பிடப்படும் :

| விதி மீறல் | அபராத கட்டணம் |
|---|---|
| ஒழுங்குவிதிகளின்படி வாகனத் தரிப்பிடம் வழங்கப்படாமை | 2021.07.08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் அடிப்படையில் அமையும் |
| தள பரப்பளவு விகித மீறல் | அனுமதி அளிக்கப்பட்ட ஆண்டின் மதிப்பிடப்பட்ட கட்டுமான செலவில் 50% |
| முழுத் தழுவு அளவு மீறல் | நடைமுறையில் உள்ள அனுமதி ஆண்டின் பேர்ச் மதிப்பில் 75% |

(ii) முழு அனுமதி செயல்முறைக்காக கட்டுமானத்தின் போதான, தற்போதுள்ள அல்லது முந்தைய ஒழுங்குமுறையை, குறித்த பகுதிக்கான ஒழுங்குமுறையாகக் கருதவும் ;

(iii) பாராளுமன்றப் பகுதியின் விசேட திட்டமிடல் மற்றும் கட்டிட ஒழுங்கு விதிமுறை (வலயம் 1 மற்றும் 2 பகுதிக்கு மாத்திரம்), சுதந்திர சதுக்கத்தின் அபிவிருத்தி வழிகாட்டி திட்டப் பகுதி மற்றும் நாட்டின் வேறு எந்தவொரு விசேட அக்கறையுள்ள பகுதிகளிலும் ஒழுங்குமுறையை மீறும் எந்தவொரு கட்டுமானங்களையும் மேன்முறையீட்டுக் குழு பரிசீலிக்கக் கூடாது ;

(iv) வர்த்தமானி வெளியிடப்பட்ட திகதியின் பின்னர், கொழும்பு அபிவிருத்தித் திட்டத்தின் விசேட முதன்மை குடியிருப்பு வலயத்திற்குள் உள்ள ஒழுங்குமுறையை மீறும் எந்தவொரு விடயங்களையும் மேன்முறையீட்டுக் குழு பரிசீலிக்கக் கூடாது.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17 மற்றும் 18 ஆவது மாடி,
“சுகுறுபாய”, சுபுதிபுர வீதி,
பத்தரமுல்லை,
2023, யூன் 15.

EOG 06-0110

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.